செ.வெ.எண்:374 நாள்:10.06.2018

**திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் அணையிலிருந்து பயிர் சாகுபடிக்கு விரைவில் நீர் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஷில்பா பிராபகர் சதிஷ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

-------------------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் முகாம் அலுவலகத்தில் அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு முருகையா பாண்டியன் அவர்கள் இன்று (10.06.18) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை சந்தித்து பாபநாசம் அணையிலிருந்து பயிர் சாகுபடிக்கு நீர் திறக்க வேண்டும் என்றும் மேலும் வடக்கு மற்றும் தெற்கு கோடைமேல் அழகியன் கால்வாய், நதியுன்னி கால்வாய் மற்றும் கனடியன் கால்வாய்களை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனுவினை அளித்தர். கோரிக்கை மனுவினை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கால்வாய்களை தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் உரிய அனுமதி பெற்று பாபநாசம் அணையிலிருந்கு பயிர் சாகுபடிக்கு விரைவில் நீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சித்தலைவர் திருமதி ஷில்பா பிராபகர் சதிஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்**

**திருநெல்வேலி**